இறுதியில் அரசு உத்திரவிட்டது. எனவே இப்புதுத் திட்டம் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்துதான் செயல்பட்டு வருகின்றது. ஆகையால் பருத்திச் சாகுபடி காலத்திற்கு முன் செய்யப்படவேண்டிய பண்ணை திட்டங்கள் தயாரித்தல், கடன் வழங்க சிபாரிசு செய்தல் முதலியவற்றை முன்கூட்டியே செய்ய இயலவில்லை. இதன் காரண மாகக் கூட்டுறவு சங்கங்களில் இருந்து சில விவசாயிகள் திட்ட ஆரம்பக் கட்டத்தில் கடன்பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கக் கூடும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, அந்த விதமான குறைபாடுகள் இனி ஏற்படாமல் இருப்பதற்கான குறிப்புகளை அந்த அந்த அதிகாரிகளுக்குத் தற்போது அரசு அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முன்பே அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, அந்தப் பருத்திச் சாகுபடியாளர்களுக்கு அந்தந்த நகரத்தில் உரக் கடன் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதன் காரணமாக அவர்கள் அதிக விலை கொடுத்து, வேறொரு பக்கம் கடன் வாங்கி, உரம் வாங்கிப் பருத்திச் சாகுபடி செய்யவேண்டிய அவசியம் இருப்பதால் அவர் களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. உரக் கடன்கள் அவர்களுக்குச் சீக்கிரமாக அளிக்க அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏதாவது உத்தரவு பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது முதன் முதலாக நாம் ஆரம்பித்த திட்டம். இது கோயில்பட்டியில் ஆரம் பிக்கப்பட்டது. சாதாரணமாக, பருத்தி விதைக்கின்ற காலம் செப்டம்பர்—அக்டோபர் மாதம்தான். நாம் ஒப்பளிப்பு அளித்தது 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில். எனவே, உடனடியாக விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது ; கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்களையெல்லாம் அனுப்பிவைப்பது ஆகிய இப்படிப்பட்ட அடிப் படைப் பணியில் கொஞ்சம் காலதாமதம் ஆயிற்று. ஆனால், இந்த ஆண்டு கிட்டத்தட்ட நான்கு இலட்ச ரூபாய் நாம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்து தொகை ஒதுக்கி வைத்திருந்ததில், 3 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் அந்தத் திட்டத்தின்மூலம் கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

Price of Sugar

* 242 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether the Government is aware of the new Zones fixed by the Union Government for fixing prices of sugar;

(*b*) whether the State Government has been consulted in this regard; and

(*c*) if so, the details thereof?

The Hon. Thiru P. U. SHANMUGAM : (*a*) Yes.

(b) No.

(c) Till recently, the country was divided into six price Zones viz. Zone I, Zone II, Zone III, Zone IV, Zone V and Assam by the Government of India for fixing the ex-factory price of levy sugar. The States of Tamil Nadu, Pondicherry Andhra Pradesh, Kerala and Mysore were included under Zone II.

The Government of India have with effect from 20th February 1970 divided the country into the following 15 new cost Zones, namely—

1. Punjab.
2. Haryana.
3. Rajasthan.
4. West Uttar Pradesh.
5. Central Uttar Pradesh.
6. East Uttar Pradesh.
7. North Bihar.
8. South Bihar.
9. Gujarat.
10. Madhya Pradesh.
11. Maharashtra.
12. Mysore.
13. Andhra Pradesh.
14. Tamil Nadu and Pondicherry.
15. Orissa, Assam, Kerala and Bengal.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இம்மாதிரிப் பல்வேறு மண்டலங்களாகப் பிரிப்பதால், தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரைக்கு அதிக விலை கிடைக்குமா? தமிழ் நாட்டில் இருக்கும் சர்க்கரை ஆலைகளைத் தேசவுடைமையாக்க வேண்டும் என்ற குறிப்பினை இந்த அரசு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறதா? ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் சர்க்கரையின் விலை கூடுதலாக ஆகியிருக்கிறது என்பது உண்மை. தேசியமயமாக்குவதுபற்றி மத்திய அரசு நம்மைக் கேட்கவில்லை. நாமும் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

Dr. H. V. HANDE : Sir, may I know whether it is not a fact that during the last few months there is no difference in the price of levy sugar lifted by the Government and the open market sugar? Also, whether in view of the fact that there is sufficient stock of sugar in all godowns and there is actually glut in the sugar market, will this Government come forward to recommend to the Central Government that the control on sugar can be removed completely? Are the Government prepared to make a beginning in regard to this matter at least in our State?

The Hon. Thiru P. U. SHANMUGAM : We have already recommended to the Central Government to decontrol sugar.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, பாக்டரி சொந்தக்காரர்கள் கரும்புக்கு இன்ன விலைதான் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையைத் தமிழ்நாட்டு மில்காரர்கள் கொடுக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்குப் போடப்பட வேண்டிய கேள்வி.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கவேண்டும் என்ற எண்ணம் உத்தரப் பிரதேசத்தில் வெளிப்பட்டது. இந்த மாநிலத்திலும் சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கும் ஆலோசனை ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 'இல்லை' என்று ஏற்கனவே சொன்னேன்.

திரு. கே. விநாயகம் : சார், நமது தமிழ்நாட்டைச் சுற்றிலும் இருக்கும் மற்ற மாநிலங்களோடு சேர்த்து ஒரு ஸோனை வைத்ததன் விளைவாக நமது தமிழ் நாட்டிலே சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருந்தும்கூட, இதனை மத்திய சர்க்கார் மற்ற மாநிலங்களுக்கும் தரவேண்டும் என்று சொன்னதன் விளைவாகத்தான், தமிழ் நாட்டில் விலை அதிகமாக ஏறுகிறது என்று சொல்லப்படுகிற கருத்து உண்மை தானா? அப்படியிருந்தால், நமக்குப் போதிய அளவு உற்பத்தி அதிகமாக இருப்பதன் காரணமாக, நமது மாநிலத்திற்குத் தேவையானதை ஒதுக்கிவிட்டுத்தான், அதற்கு மேலே இருக்கும் எக்ஸெஸ் ப்ரொடக்ஷனை மற்ற மாநிலங்களுக்குத் தரமுடியும் என்று நம்முடைய தமிழ்நாடு சர்க்கார் ஒரு 'ஸ்டாண்டு' எடுத்து, வாதாடி, போராடி, அந்த நிலைமையை உண்டாக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற பிரச்சினை, தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையை எப்படி விற்பது என்பதுதான். தமிழ்நாட்டில் சர்க்கரை இல்லாமற்போய்விட்டது என்பது அல்ல பிரச்சினை. தமிழ்நாட்டில் ஏராளமாக சர்க்கரை இருக்கிறது. ஆந்திராவும் தனி மண்டலமாகிவிட்டது. கேரளாவும் தனி மண்டலமாகிவிட்டது. மைசூரும் தனி மண்டலமாகிவிட்டது. தமிழ்நாட்டையும் தனி மண்டலமாகப் பிரித்துவிட்டார்கள். ஏற்கெனவே, தென் மண்டலமாக இருந்தபோது ஒரே விலையாக இருந்தது. இப்பொழுது விலை மாற்றத்தின் காரணமாக—என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால்—ஆந்திராவில் சர்க்கரை விலை நம்மைவிடப் பத்து ரூபாய் குறைவாக இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆந்திராவைவிட நமக்கு விலை அதிகமாக இருக்கிறது. அதனால் ஆந்திராவிலிருந்து சர்க்கரை இங்கு வர வாய்ப்பு இருக்கிறது. தமிழ்நாட்டில் சர்க்கரைப் பற்றுக்குறையே கிடையாது.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இம்மாதிரியாக மண்டலங்களாக மத்திய சர்க்கார் பிரிக்கின்ற காலத்தில் மாநில அரசாங்கத்தைக் கலக்க வேண்டும் என்ற ஒரு விதி இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த விதி மீறப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படியொன்றும் விதி இருப்பதாகத் தெரியவில்லை. டாரிஃப் கமிஷனுடைய சிபார்சுகளின் பேரில்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் சர்க்கரை அதிகமாக உற்பத்தியாகிறது. சர்க்கரை இருப்பு அதிகமாகவும் இருக்கிறது. அந்த நிலைமையில் இருக்கக் கூடிய சர்க்கரையை மலிவான விலையில் மக்களுக்கு விநியோகிக்க, விலையைக் குறைத்து அரசாங்கம் நிர்ணயம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, சர்க்கரை உற்பத்திச் செலவு குறையவில்லை. சர்க்கரைக்காக நிர்ணயிக்கப் பட்டிருக்கிற வேஜ் போர்டு சம்பளத்தைவிட அதிகமாக ஊதியம் கேட்கிறார்கள். அதற்கு மேல் தமிழ்நாட்டில் கொடுக்க முடியவில்லை. விலை குறையாததற்குக் காரணம் உற்பத்தி விலை குறையவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : What is the quantity of sugar that we require for our State? How much quantity of sugar is available here?

THE HON. THIRU P. U. SHANMUGAM : I want notice please.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு சர்க்கரை உற்பத்தியாகிறது? பிற மாநிலங் களில் எவ்வளவு உற்பத்தியாகிறது? பற்றுக்குறையுள்ள மாநிலங் களுக்கு நம்முடைய மாநிலத்திலிருந்து சர்க்கரையை அனுப்புவதற்கு மத்திய அரசிடம் நாம் ஏற்கனவே பேச்சு வார்த்தைகள் ஏதாவது நடத்தியிருக்கிறோமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த மாநிலத்தில் எவ்வளவு உற்பத்தியாகிறது என்பதுபற்றித் தனிக்கேள்வி போட்டால், விவரம் சேகரித்துப் பதில் சொல்லலாம். பற்றுக்குறை மாநிலங்களுக்கு நமது மாநிலத்திலிருந்து சர்க்கரை விற்பதற்கு மத்திய சர்க்கார் ஆணை பிறப்பிக்க வேண்டும், ஓபன் மார்க்கெட் ஷுகரை எங்கு வேண்டுமானாலும் விற்கலாம். ஆனால் நம் மாநிலத்தில் விலை அதிகமாக இருப்பதால், வெளி மாநிலங்களுக்கு சர்க்கரை போவதற்கு வழி குறைந்து இருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : சிங்கப்பூர், சிலோன் ஆகிய நாடுகளில் சர்க்கரை பற்றுக்குறை இருப்பதினால், நமது மாநிலத்திலிருந்து சர்க்கரை வாங்கிக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று பேப்பரில் செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றி நமது சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது பார்லிமெண்டில் போட வேண்டிய கேள்வி.